ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

ஆர்ய தர்மம்.

अळिन्दसुरपादपः श्रितवतां दयातोऽर्जुने
पुळिन्दवपुराप्तवानघहरस्वनामाक्षरः ।
मिळिन्दकचयैकया मिळितवामभागः स्फुरत्
कळिन्दतनयोर्मिनिर्मलगळोऽयमस्मत्प्रभुः ॥

அளிந்த³ஸுரபாத³ப: ச்ரிதவதாம் த³யாதோऽர்ஜுநே
புளிந்த³வபுராப்தவாநக⁴ஹரஸ்வநாமாக்ஷர: ।
மிளிந்த³கசயைகயா மிளிதவாமபா⁴க³: ஸ்பு²ரத்
களிந்த³தநயோர்மிநிர்மலக³ளோऽயமஸ்மத்ப்ரபு⁴: ॥

स्तुतिपद्धतौ । ஸ்துதிபத்³த⁴தௌ ॥

எவர் இயற்கையிலுள்ள கருணையால் தமது பக்தர்களுக்கு அவர்கள் வீட்டிலிருக்கும் கற்பக விருக்ஷம்போல் ஆகின்றாரோ? தர்மரின் ஸஹோதரனை அர்ஜுனனுக்காக எவர் வேட வேடம் பூண்டாரோ? எவர் ஸகல பாபங்களையும் அடியோடகற்றும் திறமை வாய்ந்த தம்பெயரில் விளங்கும் எழுத்துக்களை யுடையரோ எவர் வண்டுகளின் மேனிபோல் கருத்த கேசத்தையுடைய ஸ்ரீபார்வதி தேவியால் பிரகாசிக்கின்ற தம் வாமபாகத்தையுடையவரோஎவர் யமுனை யாற்றின் அலைபோல் கருப்பாய் விளங்கும் நிர்மலமான கண்டத்தை யுடையவரோ அம்மஹான் எங்களுக்குப் பிரபு ஆகிறார்.

இதினால் தம் பக்தர்களுக்கு அவர்கள் வீட்டிற்குள்ளிருக்கும் கற்பகம்போல் எப்பொழுதும் எதையும் கொடுக்கிறவரும் தான் ஈசுவரனாகை யிருந்தும் அர்ஜுனன்என்றும் பக்தனுக்காகத் தகாத கீழ்ஜாதியான வேட ஜாதியிற்தோன்றி அவனால் செய்யப்பட்ட அவமானத்தையும் அடைந்து முடிவில் அவனுக்கு அநுக்கிரஹம் செய்தவரும் திருப்பாற் கடலிலிருந்தும் உண்டான காலகூடம் என்கிற கொடிய விஷத்தையருந்தி அதினால் உலகங்களுக்கு யாதொரு ஆபத்தில்லாமல் பாதுகாத்தவரும் ஸகல பாபங்களையும் போக்கும்சக்தி பெற்ற சிவ. ஹர. முதலான பல திருநாமங்களை தரிக்கின்றவரும் கருணாநிதியுமான ஸ்ரீ பகவானையே நாங்கள் எங்களுக்குப் பிரபுவாகக் கருதி உபாஸிக்கிறோம் என்று ஒரு பக்தர் தம் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

க்ஷய வருஷ மாசி-மீ உஎஉ

ஸ்த்ரீ தர்மம்.

வர்ணங்களுக்கோ, ஆசிரமங்களுக்கோ, வர்ணாசிரமங்களுக்கோ ஏற்பட்ட தர்மாதர்மங்களையும் அவைகளிலும் விசேஷமாயுள்ள ஸ்திரீகளுக்குற்ற தர்மங்களையும் புமான்களுக்குள்ள தர்மங்களையும் இவர்கள் செய்யத்தகாத அதர்மங்களையும் சாஸ்திரங்களின் முகமாக நன்கு தீர்மானிக்கவேண்டுமேயன்றி அவரவர்களுக்குத் தோன்றியபடி தர்ம்மாதர்ம வியவஸ்தை செய்வது மிகவும் தவறேயாகும். धर्मस्य तत्वं निहितं गुहायां (தர்மஸ்ய) தத்வம் நிஹிதம் குஹாயாம் தர்மத்தின் உண்மையானது ரஹஸ்யமான இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது என்றும் சாஸ்திரங்களே வெளியிடுகின்றது. ஆகையால் நம்போன்றவர்கள் அதை சுலபமாயறியவியலாது. இவ்விதமிருக்க தற்காலத்திய சிலர் தம்மையே ஸ்மிருதி கர்த்தாக்களாகக் கருதிக்கொண்டு தோன்றியவாறெல்லாம் தர்ம்மமென்று பல விபரீதாசாரங்களை அநுஷ்டிக்கவேண்டுமென்று சொல்லுவதுபோல் ஸ்திரீகள் விஷயத்திலும் மிகவும் கருணைகொண்டு ருதுமதீ விவாஹம், விதவா விவாஹம் இவைகள் செய்யவேண்டுமென்றும் ஓட்டு ஸ்வாதந்திரியம் கொடுக்கவேண்டுமென்றும், சட்டஸபைகளில் மெம்பர் ஸ்தானமும், ராஜாங்கவேலைகளும், மற்றும் ஸகல ஸ்வாதந்திரியங்களும், புருஷர்களுக்குப்போல் இவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்றும் மிகவும் நிர்ப்பந்திக்கிறார்கள். ஸ்திரீகளில் சிலரும் இதற்காக முயற்சி எடுத்துக்கொண்டு வேலைசெய்கிறதாயும் தெரிகின்றது. இவர்கள் விஷயத்தில் சாஸ்திரங்கள் எவ்விதம் அபிப்பிராயப்படுகின்றனவென்பதை விசாரிக்கவேண்டிய அவசியம் நேர்ந்திருப்பதால் அவைகளைக் கொஞ்சம் விசாரிக்க முன்வருகிறோம்.

ஸ்திரீகளுக்கு ஒருக்காலும் ஸ்வாதந்திரியம் கூடாது.

बाल्ये पितुर्वशे तिष्ठेत् पाणिग्राहस्य यौवने ।
पुत्राणां भर्तरि प्रेते न भजेत् स्त्री स्वतन्त्रताम् ॥ मनुः ।

𑌬𑌾𑌲𑍍𑌯𑍇 𑌪𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌶𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍 𑌪𑌾𑌣𑌿𑌗𑍍𑌰𑌾𑌹𑌸𑍍𑌯 𑌯𑍌𑌵𑌨𑍇 ।
𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌭𑌰𑍍𑌤𑌰𑌿 𑌪𑍍𑌰𑍇𑌤𑍇 𑌨𑌭𑌜𑍇𑌤𑍍𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑌾𑌮𑍍 ।

ஸ்திரீகள் பால்யகாலத்தில் பிதாவின் சாஸனத்திலும் விவாகமான பிறகு தம் பதியின் ஆக்ஞையிலும் பதியின்காலம் சென்றுவிட்டால் புத்திரர்களிடமும் வஸிக்கவேண்டும். ஒருஸமயமும் ஸ்வதந்தரமாயிருக்கக்கூடாது. புத்திரனில்லாவிட்டால்

तत्सपिण्डेषुचासत्सु पितृपक्षः प्रभुः स्त्रियः ।
पक्षद्वयावसानेषु राजा भर्ता स्त्रियो मतः ॥ नारदः ।

𑌤𑌤𑍍𑌸𑌪𑌿𑌣𑍍𑌡𑍇𑌷𑍁𑌚𑌾𑌸𑌤𑍍𑌸𑍁 𑌪𑌿𑌤𑍃𑌪𑌕𑍍𑌷𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌪𑌕𑍍𑌷𑌦𑍍𑌵𑌯𑌾𑌵𑌸𑌾𑌨𑍇𑌷𑍁 𑌰𑌾𑌜𑌾 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋𑌮𑌤𑌃 ॥ 𑌨𑌾𑌰𑌦𑌃

புத்திரனில்லாவிட்டால் அவள் ஸபிண்டர்களிடமிருக்கவேண்டும் என்று மனுஸ்மிருதியில் கூறப்பட்டிருக்கின்றது. அவர்களுமில்லாவிட்டால் பிதாவினுடைய ஸபிண்டர்களிடமும், அவர்களுமில்லாவிட்டால் ராஜாவினுடைய ரக்ஷணையின்பேரில் இருக்கவேண்டுமேயல்லாமல் தனியாயிருக்கக்கூடாது என்று மனுஸ்மிருதி வியாக்கியானத்தில் நாரதர் கூறியிருக்கிறார்.

மறுபடியும்:—

पिता रक्षति कौमारे भर्ता रक्षति यौवने ।
पुत्रस्तु स्थाविरे भावे न स्त्री स्वातन्त्र्यमर्हति ।
अस्वतन्त्राः स्त्रियः कार्याः पुरुषैस्स्वैर्दिवानिशम् ॥

𑌪𑌿𑌤𑌾 𑌰𑌕𑍍𑌷𑌤𑌿 𑌕𑍌𑌮𑌾𑌰𑍇 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌰𑌕𑍍𑌷𑌤𑌿 𑌯𑍌𑌵𑌨𑍇 ।
𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌥𑌾𑌵𑌿𑌰𑍇 𑌭𑌾𑌵𑍇 𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 ।
𑌅𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌃𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍈𑌸𑍍𑌸𑍍𑌵𑍈𑌰𑍍𑌦𑌿𑌵𑌾𑌨𑌿𑌶𑌮𑍍 ॥

ஸ்திரீகளை பிதாமுதலானவர்கள் கிரமமாக ரக்ஷிக்கவேண்டுமென்று சொல்லி ஒருஸமயம் அந்த ஸ்திரீகள் தர்மம் தெரியாமல் மாறினலும், அவர்களை அவர்களுக்கு பாத்தியப்பட்டவர்களான புருஷர்கள் இஷ்டம்போல் விடாமல் தமக்குள் அடக்கிவைத்துக் கொள்ளவேண்டுமென்று மனுவே கருதுகிறார்.

இவ்விதமே

रक्षेत्कन्यां पिता विन्नां पतिः पुत्रस्तु वार्धके ।
अभावे ज्ञातयस्तेषां स्वातन्त्र्यं न क्वचित्स्त्रियः ॥

ரக்ஷேத்கந்யாம் பிதா விந்நாம் பதிஃ புத்ரஸ்து வார்த்தகே ।
அபாவே ஜ்ஞாதயஸ்தேஷாம் ஸ்வாதந்த்ர்யம் ந க்வசித் ஸ்த்ரிய: ॥

கன்யாவஸ்தையில் பிதாவும் விவாஹமான பிறகு பதியும் பிறகு புத்திரனும் அவனில்லாவிட்டால் ஞாதிகளும் முறையே ஸ்திரீயைப் பாதுகாக்கவேண்டும் ஒருஸமயமும் ஸ்திரீக்கு ஸ்வாதந்திரியம் கிடையாதென்று யாக்ஞவல்கியரும் வெளியிட்டிருக்கிறார். எதற்காக ஸ்திரீகளுக்கு நிர்ப்பந்தத்தைக் கொடுக்கவேண்டும்? அவர்களும் புருஷர்களைப்போல் ஏன் ஸ்வதந்தரமாக யிருக்கக் கூடாதென்றால்:—

पित्रा भर्त्रा सुतैर्वापि नेच्छेद्विरहमात्मनः ।
एषां हि विरहेण स्त्री गर्ह्ये कुर्यादुभे कुले ॥

பித்ரா பர்த்ரா ஸுதைர்வாபி நேச்சேத்விரஹமாத்மந: ।
ஏஷாம் ஹி விரஹேண ஸ்த்ரீ கர்ஹ்யே குர்யாதுபே குலே ॥

ஸ்திரீயானவள் தன்பிதா முதலியவர்களிடமே அவசியம் இருக்கவேண்டும் அவர்களை விட்டுப் பிரிந்து தனியாக ஒரு ஸமயமும் தான் இருக்கக்கூடாது. அவ்விதமின்றி தன்னிஷ்டம்போல் தனியாக இருப்பாளாகில் அவளுடைய பிதாவின் குலத்திற்கும், பர்த்தாவின் குலத்திற்கும் நிந்தையுண்டுபண்ணுகிறாள் என்றும் மனுவே கூறியிருக்கிறார். இதனால் ஸ்திரீகள் எந்தஸமயத்திலும் தங்களிஷ்டம்போல் ஸ்வதந்திரமாயிருக்கக்கூடாதென்றும் அவ்விதமிருந்தால் தாம்பிறந்த குலத்திற்கும் பதியின் குலத்திற்கும் பல ஜனங்களும் நிந்திக்கும்படி அவமானத்தை விளைவிக்கிறார்களென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றது. பிதா முதலானவர்களால் விவாகம் செய்துகொடுத்தபிறகு தம் பதியையே தெய்வமாகப் பாவிக்கவேண்டும்.

यस्मै दद्यात्पितात्वेनां भ्राताचानुमते पितुः ।
तं शुश्रूषेत जीवन्तं संस्थितं च न लंघयेत् ॥

யஸ்மை தத்யாத் பிதாத்வேநாம் ப்ராதா வாநுமதே பிது:।
தம் ஶுஶ்ரூஷேத ஜீவந்தம் ஸம்ஸ்திதம் ச ந லங்கயேத் ॥

தன் பிதாவோ அல்லது அவர் உத்திரவுபெற்ற ஸகோதரனோ இவர்கள் யாருக்குத்தன்னை விவாகம் செய்துகொடுக்கிறார்களோ அவருக்கு அவர் ஜீவதசையுள்ளவரையில் பணிவிடை செய்ய வேண்டும். ஒருஸமயம் அவர் முந்தி மரித்தாலும் பத்நியாகிய இவள் அவரையே பதியாகக்கருத வேண்டுமேயல்லாமல் வேறு விதமாக மாறக்கூடாதென்று மனு அபிப்பிராயப்படுகிறார்.

न पिता नात्मजो नात्मा न माता न सुहृज्जनः ।
गतिर्भवति च स्त्रीणां पतिस्त्वेकः परागतिरिति रत्नावलौ ॥

ந பிதா நாத்மஜோ நாத்மா ந மாதா ந ஸுஹ்ருஜ்ஜந: ।
கதிர்பவதி ச ஸ்த்ரீணாம் பதிஸ்த்வேக: பராகதிரிதி ரத்நாவளௌ ॥

ஸ்திரீகளுக்கு விவாகமானபிறகு பிதா முக்கியமல்ல, புத்திரன் முக்கியமல்ல மாதா மற்றுமுள்ள ஸுஹிருத்துக்களும் முக்கியமல்ல தம் சரீரத்தைப் பாதுகாப்பதுகூட முக்கியமல்ல பதி ஒருவன்தான் முக்கியமாய் ஆராதிக்கத்தகுந்தவன் அவன் தான்சிறந்த பிடிப்பாகிறான் அவனுக்குப் பிறகுதான் மற்றுமுள்ளோர்களை கவனிக்கவேண்டுமென்று ரத்நாவளியில் சொல்லப்பட்டிருக்கின்றது.

न पिता नात्मजो नात्मा न माता न सुहृज्जनः ।
इह प्रेत्य च नारीणां पतिरेको गतिस्सदा ॥   वाल्मीकिः ।

ந பிதா நாத்மஜோ நாத்மா ந மாதா ந ஸுஹ்ருஜ்ஜந: ।
இஹ ப்ரேத்ய ச நாரீணாம் பதிரேகோ கதிஸ்ஸதா ॥ வால்மீகி: ॥

ஸ்திரீகளுக்கு இவ்வுலகிலும் பரலோகத்திலும் இருக்கும்பொழுதும் இறக்கும்பொழுதும் இடைவிடாமல் எப்பொழுதும் அடையக்கூடியவன் பர்த்தா ஒருவன் தான். தாய்தந்தை முதலானோர்கள் அவ்விதமாகமாட்டார்கள். ஆகையால் அந்தப்பதியையே எப்பொழுதும் சரணாகதிபடைந்து சுச்ரூஷை செய்யவேண்டுமென்று வால்மீகியும் கூறுகின்றார்.

(தொடரும்)   உபபத்திராதிபர்.

வித்யாவிகாஸினீஸபை, ஸம்ஸ்கிருத காலேஜ், திருவாதி,

திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜ் வித்யாவிகாஸினீ ஸபையின் வருஷாந்திரக் கொண்டாட்டம். 12—2—27 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாயிற்று. அவ்வமயம் ஷெ ஸபா பிரஸிடெண்டும், ஷெ கல்லூரித்தலைவருமாகிய ஸ்ரீ மான் S வேதாந்தமய்யங்கார் M. A. L. T. அவர்களுடைய பிரேரணைக்கிணங்கி, தஞ்சை ஸ்ரீமான் டிரீஷரி டிப்டி கலக்டர் T. P. கிருஷ்ணசாமி சாஸ்திரிகள் M. A. அக்ராஸனம் வகித்தார். பின்னர். ஷெ கல்லூரி. மாணவர்களால், மீமாம்ஸை, தர்க்கம், வியாகரணசாஸ்திரங்களில் வாக்யார்த்தங்கள் நடத்தப்பட்டன. பிறகு, கொட்டையூர் பண்டிட் ஸ்ரீமான். R. சேஷசாயி அய்யங்காரவர்களால் (ஸம்ஸ் கிருத வித்வான்களுடைய தத்கால நிலமை) என்னும் விஷயத்தைப்பற்றி வெகு ருசிகரமாக மேல் கோட்பாடுடன், ஓர்சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. உடனே குத்தாலம்போர்டு ஹைஸ்கூல் ஸ்ரீமான், டி. ஜி. அனந்தாசாரியார் M. A .L. T. அவர்களால். (ஆங்கில வித்யையும், அதன் நோக்கமும்) என்ற விஷயத்தைப் பாலர்களுக்குக் கூட நன்கு விளங்குமாறு ஆங்கிலத்தில் எடுத்துக் காட்டப்பட்டது. பிரகு, ஷெகல்லூரி தமிழாசரியர், ஸ்ரீமான் எம். எஸ். ஸந்தானமய்யங்காரவர்களால் (தமிழின் பெருமை) என்னும் விஷயத்தைத் தென்மொழியில் அறிய பற்பல மேற்கோட்பாடுடன், ஓர் உபந்யாஸம் செய்யப்பட்டது பிறகு காரியதரிசி, அவர்களால் வருஷாந்திர ரிபோர்ட்டும்,ஜில்லாஜட்ஜிகள், ஜில்லா கலக்டர்கள். ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்திஅய்யர் முதலியவர்களிடமிருந்து வந்த கடிதங்களையும், படிக்கப்பட்டது பிறகு அக்ராசனாதிபதி அவர்கள் பேசியதாவது நமது தாய் பாஷைபானது மேன்மேலும்விருத்தியடைந்து வருவதற்கு, இவ்விதமான உபந்யாஸங்களும், ஸம்ஸ்கிருதத்திலேயே ஸம்பாஷிப்பதும், இவ்விதமான நாடகங்கள் நடத்திக் காட்டுவதுமே முக்கியமானவைகளென்றும் இவ்விதமான கல்லூரிகளும் இவ்விதமான அபிமானிகளும் மேன் மேலும் விருத்தியடைய

வேண்டுமென்றும் தனது அளவு கடந்த பயிற்சியை எடுத்துக் காட்டினார்கள்.

பரிசு

சென்ற வருஷம் கொட்டையூர் பண்டிட், ஸ்ரீமான் R. சேஷசாயி அய்யங்காரவர்களால் ஏற்படுத்தப்பட்ட தங்க மெடலை இவ் வருஷம் மீமாம்ஸை வகுப்பில் பயிலும் ஏ. சிவராமன் என்னும் மாணவனுக்கு அக்ராஸனாதிபதி அவர்கள் மூலமாகவே அளிக்கப் பட்டது.

பிறகு ஷை ஸபா பிரசிடெண்டு அவர்களால் இங்கு அக்கிராஸனாதிபதி அவர்கள் விஜயத்திற்கும்: அக்ராஸனாதிபதியாக வந்ததற்கும், ஸபையின் சார்பாக வந்தன மளிப்பதாகவும். சொல்லி முடித்த பிறகு உபன்யாஸகர்களுக்கும் அக்ராஸனாதிபதிகள் அவர்களுக்கும் கிருதக்ஞதா வேதனரூபவான புஷ்பஹாரங்கள் சூட்டிச்சந்தனம், புஷ்பம், பழம், முதலியவை வழங்கப்பட்டன. பிறகு மாலை 6-30 முதல் 7-30 வரையில் ஷை கல்லூரி மாணவர்களால் "ஹேமலதா" என்னும் வங்காள சரித்திரக் கதையை ஆங்கிலத்தில் நடத்திக் காட்டப் பட்டது. பிறகு போஜனத்திற்கு இடைவெளிவிட்டு 9-30 மணிக்குக் காளிதாஸமகாகவியாலியற்றப்பட்ட "மாளவிகாக்நி மித்ரன்" என்னும் திவ்ய நாடகத்தை மாணவர்கள் வடமொழியில் நடத்திக்காட்டினார்கள். இதில் மாளவிகை என்னும் வேடம்பூண்ட M. S மாதவாசாரி என்னும் மாணவருடைய அபிநயாதித்திறமைகளை அக்ராஸனாதிபதி புகழ்ந்து பேசியதும் ஷை நாடகங்களை ஆங்கிலத்திலும்; வடமொழியிலும் நடத்தும்படி தயார் செய்தவராயும் ஷை கல்லூரி ஆங்கில ஆசிரியராயுமுள்ள ஸ்ரீமான் எஸ். டி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் பீ. ஏ. அவர்களுக்கு கிருதக்ஞதாவேதனத்தை ஓர் புஷ்பஹாரமூலமாகத் தெரிவித்து இத்துடன் முதல் நாள் உத்ஸவம் நிறைவேறியது.

இரண்டாவது நாள்.

இச்சபையின் இரண்டாவது நாள் கொண்டாட்டம் 13—2—27 ஞாயிற்றுக்கிழமை மாலை 8மணிக்குக் குத்தாலம் போர்டு ஹைஸ்கூல் ஸ்ரீமான் டி. ஜி. அனந்தாசாரியார் எம். ஏ.

எல். டி அவர்கள் அக்ராசனத்தின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ஷை கல்லூரி மாணவர்களால் தென்மொழியில் சுபத்ரார்ஜுநீயம் என்னும் நாடகத்தை வெகு விமரிசையாக நடைவொடை பாவனைகளுடன் நடத்திக்காட்டப்பட்டது. பிறகு அக்ராஸனாதிபதி அவர்கள் நாடகத்தின் திறமையும் அது நடத்தவேண்டிய அவச்யத்தையும் எடுத்துரைத்தனர். பிறகு அக்ராஸனாதிபதி அவர்களுக்கு மாலை சூட்டப்பட்டது. தமிழ் நாடகத்தைத் தமிழில் நடத்தும்படி தயார் செய்தவரும் ஷை கல்லூரி தமிழருமாகிய ஸ்ரீமான் டி. ஜீ. சோமசுந்திரதேசிகர் வித்வான் அவர்களுக்கு நன்றியை விளக்கக் கூடிய புஷ்பமாலையைச் சூட்டினார்கள்.

இவ்வரையில் நடத்தப்படாததான இத்தென்மொழியுடன் கூட மூன்று நாடகங்களையும் நடத்த வேண்டுமென்று ஊக்கங்கொண்டு அவ்விதமே தீவ்ர முயற்சியுடன் நடத்தியவரும் ஷை கல்லூரி மாணவரும் ஷை ஸபை ஜெனரல் ஸெகிரிட்ரியாயுமுள்ள ஜி. ஏ. இராமச்சந்திரன் அவர்களுக்கும் நன்றி பாராட்டி இத்துடன் இவ்வாண்டு நிறைவேறியது.

K. R. வைத்தியநாத சாஸ்திரி.

ஆசாரத்தின் மேன்மை.

இனி தர்மமென்பது கிரியாம்சையாதல்பற்றி அத்தகைய கிரியையை நாம் ஆசாரமென்போம். ஆசாரமென்றால் நன்கு பெரியோர்களின் நடத்தையைப் பார்த்துக்கேட்டு அனுஷ்டிப்பது என்பதுபொருள். இத்தகைய ஆசாரமுள்ளமனிதர்களைப்பார்த்து ரிஷிகளும் புகழ்கின்றனர். மனு:—

आचाराल्लभते ह्यायुराचारादीप्सिताः प्रजाः ।
आचाराद्धनमक्षय्यं आचारो हन्त्यलक्षणम् ॥

ஆசாராலுபதெ ஹ்யாயுராசாராதீப்ஸிதாః ப்ரஜாః।
ஆசாராத்தநமக்ஷய்யம் ஆசாரோ ஹந்த்யலக்ஷணம் ॥

ஆசாரத்தால் ஆயுளை அடையலாம். ஆசாரத்தால் விரும்பப்பட்ட பிரஜையை அடையலாம். ஆசாரத்தாலழிவற்ற தனம் பெறலாம்.

ஆசாரம் அலக்ஷ்மியைத் தடுக்கும் என்றார். ஆசாரமில்லாதவனை நிந்திக்கிறார்:—

दुराचारो हि पुरुषो लोके भवति निन्दितः ।
दुःखभागी च सततं व्याधितोऽल्पायुरेव च ॥

ദുരാചാരോ ഹി പുരുഷോ ലോകേ ഭവതി നിന്ദിതഃ ।
ദുഃഖഭാഗീ ച സതതം വ്യാധിതോऽല്പായുരേവ ച ॥

துராசாரமுள்ள புருஷன் உலகில் நிந்திக்கப்பெறுவான். எப்போதும் துக்கத்தை அடைந்து வியாதியுள்ளவனும் அல்ப ஆயுள் பெற்றவனுமாவான் என்றார். ஆகவே ஆசாரமென்ற தர்மானுஷ்டானமுள்ளவனுக்குக் கிடைப்பதும் அதற்றவனுக்குக் கிடைப்பதும் தெற்றென விளங்கிற்று. மற்றுமிவ்வித ஆசாரமில்லாதவனுக்கும் உள்ளவனுக்கும் ஸாமான்யமாய்க் கூறியதோடு நிற்காமல் பிராமணனுக்கு விசேஷ தோஷத்தைக் கூறுகிறார். ஆசாரத்தை விட்ட பிராமணன் வேதம் கற்றிருந்தபோதிலும் அதன் பலனை அடையமாட்டான் என்று வஸிஷ்டரும், ஆசாரமில்லாதவன் ஆறு அங்கங்களை உடைய வேதம் முழுமையும் கற்றறிந்தவனாயினும் இவன் சாகுங்காலத்தில் அவ்வேதசாஸ்திரங்கள் அவனுக்கு யாதொரு பலனையும் கொடாமல் இறக்கை முளைத்த பக்ஷிகள் கூட்டைத் திரும்பிப் பாராமல் ஓடிவிடுவதுபோல் ஓடிவிடும். ஆசாரமொன்றில்லாமல் எவ்வளவு வித்தை கற்றிருந்தபோதிலும் அவனை மரியாதை செய்யக்கூடாது என்று இரண்டொரு உதாரணம் கொடுக்கிறார். மண்டையோட்டிலிருக்கும் தீர்த்தமும் நாய்த்தோல் துருத்தியிலிருக்கும் பாலும் எவ்விதம் ஸ்தானத்தின் தோஷத்தால் கெட்டு விடுகிறதோ அதுபோல் ஆசாரமில்லாத வேதியனிடமிருக்கும் வேதம் முதலியவையும் என்று ஆகவே ஆசாரமற்ற வேதியனால் பிரயோசனமில்லை என்றாயிற்று. மற்றும் பிராமணனுடைய இந்த தேகம் இவ்வுலகில் இப்போது சுகமனுபவிப்பதற்காக வந்ததில்லை, இங்கு விரதம் உபவாசம் வேதகன்மாக்களாலும் கஷ்டத்தையடையவும் விண்ணுலகு சென்று சுகமனுபவிக்கவுமே ஏற்பட்டதென்று மற்றோர் ரிஷி கூறுகின்றார் மற்றும் பிருகஸ்பதி:—

शौर्यवीर्यैरहितः तपोज्ञानविवर्जितः ।
आचारहीनः पुत्रस्तु मानुस्वारसमः स्मृतः ॥

𑌶𑍌𑌰𑍍𑌯𑌵𑍀𑌰𑍍𑌯𑌧𑌨𑍈𑌰𑍍𑌹𑍀𑌨𑌃 𑌤𑌪𑍋𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ।
𑌆𑌚𑌾𑌰𑌹𑍀𑌨𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾𑌤𑍁𑌰𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑌸𑌮𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

சௌர்யம் வீர்யம் பணம் தபஸ் ஞானம் ஆசாரம் இவைகளற்ற புத்திரன் புத்திரனல்ல, மற்று தாயின் மூக்கிரத் வாரத்திலிருந்து விழுந்த கெட்டி பதார்த்தமென்கிறார், இங்கு பொதுவாய்க் கூறியிருந்தாலும் சௌர்யம் வீர்யமில்லாத க்ஷத்திரிய புத்திரனும் பணம் இல்லாத வைசியக் குழந்தையும் தபஸ் ஞானம் ஆசாரமில்லாத பிராமணபுத்திரன் என்று அர்த்தம்கொள்ளவேண்டுமென்றுவியாக்கியாதா விரித்துக்கூறினர். பகவானே வர்ணங்களுக்கும் ஆசிரமங்களுக்கும் எந்த எல்லை என்னால் கட்டப் பட்டிருக்கிறதோ அதை எவர்கள் சரிவர அனுஷ்டிக்கின்றனரோ அவர்களிடத்தில் எனது பிரீதி தங்குமென்றார். இவ்விதம் ஆசாரத்தை அனுஷ்டித்து வருபவனுக்குப் பிரயோஜனத்தையும் கூறினர். ஸ்மிருத்தி யந்த்ரத்தில்

यथेक्षुहेतोस्सलिलं निषेचितं तृणानि वल्लीरपि च प्रसिञ्चति ।
एवं नरो धर्मपथेन वर्तयन यशश्च कामांश्च वसूनि सोऽश्नुते ॥

𑌯𑌥𑍇𑌕𑍍𑌷𑍁𑌹𑍇𑌤𑍋𑌸𑍍𑌸𑌲𑌿𑌲𑌂 𑌨𑌿𑌷𑍇𑌚𑌿𑌤𑌂 𑌤𑍃𑌣𑌾𑌨𑌿 𑌵𑌲𑍍𑌲𑍀𑌰𑌪𑌿 𑌚 𑌪𑍍𑌰𑌸𑌿𑌞𑍍𑌚𑌤𑌿 । 𑌏𑌵𑌂 𑌨𑌰𑍋 𑌧𑌰𑍍𑌮𑌪𑌥𑍇𑌨 𑌵𑌰𑍍𑌤𑌯𑌨𑍍 𑌯𑌶𑌶𑍍𑌚 𑌕𑌾𑌮𑌾𑌂𑌶𑍍𑌚 𑌵𑌸𑍂𑌨𑌿 𑌸𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥

கரும்புக்கிறைத்த நீர் எவ்விதம் வழியில் புற்பூண்டுகளையும் வளர்க்கிறதோ இவ்விதம் தர்ம மார்க்கத்திலேயே வழுவாமற்செல்லும் மனிதன் கீர்த்தி விருப்பம் திரவியத்தையும் தற்செயலாய் அடைகிறான்என்று நாரதர். ஆசாரமில்லாத ஜன்மம்பாழ். ஞானமில்லாத ஜன்மம்வீண். சூத்திரனிடத்தில் ஆசாரம் காணப்படுகிறது. பிராமணனிடத்திலில்லை. அத்தகைய சூத்திரனைப் பிராமணனெனலாம். அந்தப்பிராமணனை அப்பிராமணனெனலாம் ஹரிபக்தியிலோசிவபக்தியிலோ ஆழ்ந்தவனாயினும் எவன் தனது ஆசிரமாசாரத்தை விட்டானோ அவன்பதிதனே. வேதமோ ஹரிபக்தியோ சிவபக்தியோ ஆசாரத்தை விட்டவனாயின் பிராமணோத்தமனாயின் அவனைக்காப்பாற்றமாட்டாது. ஆசாரத்தை விட்டவன் புண்யக்ஷேத்திரங்கள் சென்றாலும் புண்யதீர்த்தங்களில் மூழ்கினாலும் பலபலயக்ஞங்கள் செய்திடினும் அவனை ஒன்றும் காப்பாற்றாது. ஆகவே ஆசாரமிருந்தால் கிட்டாததொன்றுமில்லையென்றும் ஆசாரம் விட்டவனு

க்குக் கிடைப்பதொன்று மில்லை யென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோலாயிற்று. இவ்வளவால் வேத விஹிதமான ஆசாரம் நமக்கு ஜிவாதாரமான தென்றாயிற்று. இனி இதிலும் ஸதாசாரமென்று சொல்வதொன்றுண்டு. அதனை விளக்குவாம்.

ஸதாசாரம்.

साधवः क्षीणदोषाः स्युः सच्छब्दः साधुवाचकः ।
तेषामाचरणं यत्तु सदाचार स्स उच्यते ।
सदाचारवतां पुंसां जितौ लोकावुभावपि ॥

ஸாயவஃ க்ஷீணஷோஷாஃ ஸ்யுஃ ஸச்ஶப்தஃ ஸாயுவாவகஃ ।
தேஷாமாவரணம் யத்து ஸதாவாரஸ்ஸ உச்யதே ॥
ஸதாவாரவதாம் பும்ஸாம் ஜிதௌ லோகாவுபாவபி ॥

தோஷமற்றவர்கள்தான் ஸாதுக்களெனப்படுவார். ஸத் என்றால் நல்ல என்று பொருள். அவர்களது நடத்தை ஸதாசாரமெனப்படும். இவ்விதம் ஸதாசாரமுள்ளவர்கள் இகலோக பரலோகங்களை ஜயித்து விடுகின்றனர்:—

यस्मिन्देशे य आचारः पारम्पर्यक्रमागतः ।
श्रुतिस्मृत्यविरोधेन सदाचारस्स उच्यते ॥

யஸ்மிந்தேஶே ய ஆவாரஃ பாரம்பய்யக்ரமாகதஃ ।
ஶ்ருதிஸ்ம்ருத்யவிரோயேந ஸதாவாரஸ்ஸ உச்யதே ॥

இனி தேச தர்மம் என்னுமிடத்தில் அதுவும் ஸதாசாரமெனப்படும். ஆனால் அந்த ஆசாரம் சுருதிஸ்மிருதிக்கு விரோதமாய் இருக்கலாகாது என்று ஸம்ஸ்கார மஞ்ஜரியில் கூறிவிட்டுப் பின்னும் கூறுகின்றனர். மனு கீழ்க் கூறப்பெற்ற லக்ஷணமுள்ள ஸாதுக்களிடத்து தர்ம்விரோதமான சில கார்யங்களும் இருந்திருக்கலாம். அதைப்பார்த்துப் பெரியோரது அனுஷ்டானமே என்று அல்ப தேஜஸ் உள்ள நாமும் அனுஷ்டிக்கலாகாது. அனுஷ்டிப்பின் நாம் கஷ்டமடைவோம். அன்றியும்நம்முன்னோர்களது சரீரங்களும் இந்திரியங்களும் தேஜோமயமானவை. அத்தகையவிடத்தில்தாமரை இலையில் ஜலம் போல் அதர்மத்தினாலேற்பட்ட பாபம் ஒட்டாமலே போய்விடும். இனி இதற்குச்சில உதாரணமளிப்பாம். கதகர்

என்றோர் மகரிஷியும் பரத்வாஜரும் தன்தன் மனைவியை மாற்றிக் கொண்டு அனுபவித்தனர். வஸிஷ்டர் அக்ஷமாலியென்ற சண்டாள ஸ்திரீயை அனுபவித்தார். ப்ரஹ்மா தனது புத்ரியினிடம் சென்றார் இதுபோலெத்துணையோ இதை நாமும் அனுஷ்டிக்க முடியுமா பரசுராமர் தீரச்செயலால் தாயின் தலையை வீழ்த்தினர். இத்தகையஸாஹஸம் நமக்கடுக்குமா. ஆனால் அவர்களிடம் பாபம் சாராதென்பதற்கு இந்த உதாரணத்தை கவனிக்கலாம். பெரிய காட்டுத்தீ ஒருபுரம் பக்கத்தில் பெரியநதி சமீபத்தில் சிறுகுட்டையும் உண்டென்று வைத்துக் கொள்வோம். பலமான காற்றுஅங்கு ஓர் சமயம் நேர்ந்தது. ஏராளமான மண்ணும் குப்பையும் காற்றால் கொண்டு வரப்பெற்று மூன்றிலும் நிரப்பியது. இதனால் நேர்ந்த தென்ன காட்டுத்தீ இன்னும் உக்ரமாய் தேஜஸ்ஸுடன் பரவி தன்னிடம் வந்த குப்பைகளையும் தகனம் செய்து சுத்தமாக்கியது. நதியோ காற்று நிற்குமளவும் கலக்கமுற்றிருந்து பிறகு எல்லா வற்றையும் ஸமுத்திரத்திலும் போகும் வழிகளிலும் ஒதுக்கி விட்டுச்சுத்தமாய் நின்றது. சிறுகுட்டையின் கதியாது. இறங்கும் வழி எல்லாம் முட்களாலும் ஆபாஸங்களாலும் நிரம்பிற்று. ஜலத்தின் கதியோ செப்பத்திறமில்லை. இதுபோல் உத்தமமத்யம அதமர்களை ஊகிக்க வேண்டும் இதை அனுசரித்தே போதாயனரும் முனிவர்களும் தேவர்களும் ஏதாவதொரு அதர்மத்தைச் செய்திடினும் மனுஷ்யர்களான நாம் அந்த அனுஷ்டானம் செய்யக்கூடாதென்றார். யாக்ஞவல்கியர் ஸ்வர்க்கத்தைக் கொடுக்காததும் வேதவிஹிதமாயினும் உலகில் வெறுப்பைக் கொடுக்கக்கூடியதுமான தர்மத்தை அனுஷ்டிக்கலாகாதென்றார். உலகில் வெறுக்கத்தக்க தர்மமென்றால் பலவுள. உதாரணமாய் பெரியோர்கள் வீடேகிவந்தால் மாமிசத்தோடு தான் அர்க்கியம் கொடுக்க வேண்டும். சிராத்தத்தில் அவசியம் மாமிசம் சேர்க்கவேண்டும் புத்திரனில்லாமல் தமயனிறந்தால் இவனது மனைவியினிடத்தில் பிரவேசித்துப் புத்திரனை உண்டு பண்ணவேண்டும் என்பதெல்லாம் சாஸ்திரவிஹிதமாயினும் இக்காலத்தில் கூடாதென்று, சாஸ்திரத்தாலேயே வெறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவ்விதமெல்லாம் பார்த்து ஜாக்கிரதையுடன் தர்மானுஷ்டானமும் ஸதாசாரானுஷ்டானமும் செய்தல் வேண்டும். இனி இத்தகைய அனுஷ்டானத்திற்கு நிச்சயமாய் வழிகாட்டி ஒருவர் வேண்டும். இல்

லாவிடில் எங்கேயாவது பாழுங்கிணற்றில்விழுந்தவர்களாவோம் என்பதை ஆலோசித்துத்தான் கருணையோடு மகரிஷிகள் வேத ரஹஸ்யங்களைத் தவத்தால் கண்டு சாஸ்திரரூபமாய் எழுதிவைத்தனர், அதனை நாம் சாஸ்திரமென்று மட்டிலும் அழைப்பதில்லை. மற்று தர்மசாஸ்திரம் என்று தான் அழைப்போம். அது தர்மத்தையே தான் கூறும். அதர்மங்களை விலக்குவதற்காக அதன் ஸ்வரூபத்தையும்வெளியிடும், ஆகவே ஆசாரானுஷ்டானத்திற்குத்தர்ம சாஸ்திரம்தான் முக்கியமென்பதை இப்போது நிரூபிப்பாம்.

எம். என் சுப்பிரமணிய சாஸ்திரியள்.

ஸ்ரீ தண்டாயுதபாணிஸ்வாமி ஜீர்ணோத்தாரண மஹாகும்பாபிஷேகம்.

लोकास्समस्तास्सुखिनो भवन्तु லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகினோபவந்து என்ற கருத்தை முன்னிட்டு துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனத்திற்காக துர்மதகண்டனமும் ஸன்மதமாகியஷண்மதஸ்தாபனமும் செய்யப்பூமியிலவதரித்து ஒருமடமென்றுமேற்படுத்தி அதில் அனேக சீடர்களையும் சம்பாதித்து தர்மத்தை நிலைக்கச்செய்ய அங்காங்கு விஜயம்செய்தும் சீடர்களை அனுப்பிவைத்தும் அனுக்ரகம் செய்துவரும் நமது கருணாமூர்த்தியாகிய சர்வேசனே ஆதிசங்கரபகவத்பாதாளா யவதரித்தும் பின்பு அப்பீடத்தில் அனேக மூர்த்தியாகவே மாறியிருந்தும் வெகுகாலமானமையால அதர்மமதிகரித்ததை அடக்கவே மறுபடியும் இதுசமயம் சர்வேசனே தர்மஸ்தாபனார்த்தமாகவேயவதரித்து அப்பீடத்தில் வீற்றிருந்து சீடர்களுக்குச்சுபதேசம் செய்து அனுக்ரஹித்துவருகிற ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்காசாரிய ஸ்வாமிகளுடைய திவ்ய மஹாஸன்னிதானம் ஆங்காங்கு விஜயம் செய்துவருவதும், அக்காலத்தில் பலவிடங்களிலும் விசேஷ ஆலயப்ரதிஷ்டை, ஜீர்ணோத்தாரணம், முதலியதும் செய்து அனுக்ரஹித்துவரும் விஷயம் யாவரும் அறிந்ததே.

அதேவிதமாக சமீபகாலத்தில் இங்குள்ள புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தை ஒட்டிய இராமச்சந்திரபுரமென்ற ஊரிலுள்ள

வடவண்டைக் கோடியில் விளங்கிவரும் ஓர் தண்டாயுதபாணி ஸ்வாமியுடைய ஆலயமானது தனவைசியர்களால் ஏற்படுத்தப் பட்டு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிகளுடைய திவ்யவிஜயயாத்திரை சமயம் விஜயம் செய்து அனுக்கிரஹிக்கவும்பட்டது.

அவ்வனுக்ரகத்தின் பக்வகாலம் வந்தவுடன் ஷை ஆலயத்தி லிருந்த மூர்த்தி வெகுநாளாக தாருவாலேற்பட்டிருந்தும், குரு கடாக்ஷ வீக்ஷணத்தால்உடனே சிலாரூபமடைந்து ஸ்ரீஜகத்குரு மகாசன்னிதானத்திலிருந்து அனுக்ரக பூர்வமனுப்பப்பட்ட திவ்யமந்திர ஜபங்களோடு கூடிய யந்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு ஜீர்ணோத்தாரண மகாகும்பாபிஷேகத்தைப் பெற்றதாயுள்ள இவ வானந்தத்தை எல்லோருமடைந்து சந்தோஷத்துடன் ஈசனரு ளுக்கும் பாத்திரர்களாகவேண்டி எல்லோரும் முயற்சிக்கவும் வேண்டுகிறோம்.

மேலும் இவ்வாலயத்தை அண்டினகுடும்பத்தலைவராகியபழ. சுப்ரமணியஞ் செட்டியாரும் மு. கு. ப மு. சிதம்பரஞ்செட்டியா ரும்' கு. பெரி. அருணாசலஞ் செட்டியாரும் இன்னும் மற்றவரும் இந்த மகாகும்பாபிஷேகத்தை அதிக சிரத்தையோடு திரவியச் செலவைப் பொருட்படுத்தாது வெகுவிமர்சையுடன் பண்டித சிவத்விஜர்களை வரவழைத்து பூஜாதிலோபம் கொஞ்சமுமில்லா மல் நல்லவேதியரையும் வரவழைத்து வேத பாராயணாதிகளையும் செய்வித்தும் ஐந்துகாலம் கடஸ்தாபனம் செய்தவிடத்தில் பூஜா தீபாராதனம் முதலியதும் செய்தும் பிரசாதமும் பெற்றுக் கொண்டு பிறகு நாளது தைமீ 25உ திங்கட்கிழமை தினம் விரு ஷப லக்னத்தில் ஸ்ரீ தண்டாயுதபாணி ஸ்வாமி ஜீர்ணோத்தாரண மகாகும்பாபிஷேகத்தை நடத்திவைத்தனர்.

அந்த சமயம் ஸ்ரீ மகாசன்னிதானத்தின் முழுமையான அனுக்ரகத்தால் அங்கிருந்து விஜயம்செய்த ப்ரும்மஸ்ரீ அல்லூர் வேதமூர்த்தி சுப்பிரமணிய கனபாடிகள் பிரதிமையுடன் நாலு நாள் முன்னதாக வந்து ஜபாதிகளைச்செய்து சிலாமூர்த்தி பீடத் தில் ஸ்தாபனம் செய்ததும் ஸ்ரீ மகா சன்னிதானத்திலிருந்து அருள்செய்த பீதாம்பரமும் பிருதுகளுடன் மேளவாத்தியம் உப னிஷத் பாராயணம் இத்துடன் எழுந்தருளி ஆலயத்தை பிரதக்ஷ

ணம்வந்து சாக்ஷாத் சான்னித்யம்பெற்ற தண்டாயுதபாணிமூர்த்திக்கு அலங்காரமானவுடன் சாத்தப்பட்டதும் ஆயிரம் நாககுளைமைந்த ஆதிசேடனே வர்ணித்தல்சாத்யம் அல்லாது வேறில்லை.

இதைப்பார்த்திருந்த பக்தர்கள் அனைவரும் கண்டு மனமகிழ்ந்து புளகாங்கிதர்களாகி சில நிமிஷங்கள் ஆனந்த பரவசராக மெய்மறந்திருந்தனர்.

அதோடு இக்கலியுகத்தில் பக்திமார்க்கமே கடவுளையடைய முக்ய உபாயமென்றும் அந்த பக்தி காயிக, வாசிக மானஸிகமாக முப்பிரிவையுடையதாகையால், ஓர் மூர்த்தியை வணங்குவதாலும் துதிப்பதாலும் த்யானிப்பதாலும் அம்மூன்றுவிதபக்தியும் நமக்கு ஏற்படுமாகையால் அதற்காக ஒரு மூர்த்தியை பிரதிஷ்டை செய்வது மிக அவ்சியமென்றும், இதற்காகத் தான் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியாளும் ஆங்காங்கு ஆலயப்ரதிஷ்டை ஜீர்ணோத்தாரணம் முதலியதுகளைச் செய்வித்து வருகிறார்கள் என்று தெரிந்துகொண்டு மிகவும் ஆனந்தித்தார்.

ஆகையால் ஆஸ்திகர்களும் பக்தர்களும் ஈசனை வணங்கித் துதித்து த்யானித்து மூவிதபக்தியை திடப்படுத்தி குருகடாக்ஷத்திற்கும் ஈசனருளுக்கும் பாத்திரர்களாகவேணுமாய் முயற்சிப்பதே உலகத்தார் கடமை.

N. சிவசுப்பிரமண்ய சாஸ்திரி
ஹைஸ்கூல் பண்டிதர்
ராமசந்திரபுரம்.

2-ம் பாகம்,

அரசாங்கம்.

இவ்வாறு பிரும்மாவால் அபிஷேகம் பெற்ற பிருதுமகாராஜர் பர்ஹிஷ்மதி என்ற பிரதான நகரத்திலேயே, வஸித்துக்கொண்டு துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனஞ் செய்து, குடிகளைப்

போஷித்து, ஸத்ஸபைகளை யுண்டாக்கி, அதன் மூலமாய்த் தர்மங்களையறிந்து, பகவத்பக்தியால் பரிசுத்தமான மனதுடன் தரணியை ஆண்டுவந்தார்.

தர்மோபதேசம்.

அப்போது ஒரு சமயத்தில், ஸூதர்மைக்கொப்பான அவரது ஸத்ஸபையில், மரீசி முதலான மகான்கள் வரவே, மகாராஜன் எழுந்து வணங்கி, குசாசனங்களில் அவர்களை அமரச்செய்து அவர்களின் அநுமதி பெற்றுத் தானும் உட்கார்ந்தார். அப்போது அம்முனிவர்கள் சபையோரை நோக்கி தர்மங்களின் நுட்பங்களை அறிவிக்கலாயினர். ஓ குடிகளே! கேளுங்கள்! மகாபாகவதரான த்ருவரின்மரபிலுதித்தவரில்வேனன்நீங்கலாகமற்றயாவரும் வர்ணாசிரமந்தவறாமல் நீதிமுறைப்படி அரசாண்டவர்கள், வர்ணஸாங்கர்யம் என்பது இல்லவே இல்லை. ஆனால் செல்வங்கள் கொடுப்பதாலும் ஜீவித்திருப்பது ஸத்குணங்களாலும் கலப்பைப் பெற்றன. இம்மகாராஜனும் பழையவழக்கங்களைக் கைப்பற்றிபகவானுடையபக்திபெருகி, யாவரும்கொண்டாடும்படி அரசுபுரிந்து வருகிறார் இவ்வுலகிலும் மேலுலகிலும், சுகத்தைத் தரக்கூடியது தர்மம் ஒன்றே ஆகையால் யாவரும் தர்மத்தைக் கைக்கொள்வதற்குத் தக்கபடி அரசாளும் மகாராஜனிடத்தில் விசுவாஸதோடிருந்து, தர்மத்தை ஆசரித்தல் வேண்டும்.

புருஷனால்இயற்றப்படாத வேதமானது எதைச்செய் என்று போதிக்கிறதோ அதுவே தர்மம். எதைச் செய்யாதே என்று தடுக்கிறதோ; அதுவே அதர்மம்என்று ஜைமினி கூறுகிறார். "எக்காரியத்தை ஆர்யர்கள் கொண்டாடுகின்றனரோ அதுவே தர்மம்" என்றும் எதை நிந்திக்கின்றனரோ அதுவே அதர்மம்" என்றும் ஆபஸ்தம்பர் கருதுகிறார். சுருக்கமாய் நூல்களைஆராய்ச்சி செய்யுமிடத்து, வேதம், தர்மசாஸ்திரம், ஸத்துக்களின் ஆசாரம் மனதுக்கு நிர்ணயமாய்ப்படுவது என்ற நான்கும் தர்மத்திற்குப் பிரமாணமென்று மனு போதிக்கிறார். அந்த தர்மம் வர்ணதர்மம், ஆசிரம தர்மம், வர்ணாசிரம தர்மம், நைமித்திக தர்மம்,குணதர்மம் என்றுஐந்துவகைப்பட்டதுஎன்று தர்ம நூல்கள் அறிவிக்கின்றன.

(தொடரும்.) K. V. சுப்பிரமண்ய சாஸ்திரி.